Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.1**

Defence

Court

| | |
|---|---|
| Name | அமுதா |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பத்தில் வசிக்கிறேன். நான் சாலை ஓரத்தில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். இறந்த அரவிந்த் என்கின்ற சாமிநாதன் எனது மகன். ஆஜர் எதிரி எங்கள் தெருவில் தான் குடியிருந்தார். அந்த வகையில் அவரை எனக்கு தெரியும். 25.01.2025 அன்று இரவு 11.30 மணிக்கு வீட்டில் தூங்கிகொண்டிருந்த போது என் கடையில் வேலை செய்த நவீன்குமார் எனது மகனை குறிப்பிட்டு அண்ணனை வெட்டிவிட்டார்கள் என போன் மூலமாக தகவல் கொடுத்தார். உடனே நான் பக்கத்து வீட்டு அம்மாவுடன் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சென்று பார்த்த போது என் மகனை தலையிலிருந்து உடல் முழுவதுமாக வெட்டி இருந்தார்கள் (சாட்சி மேற்சொன்ன விவரத்தை சொல்லும் போது கதறி அழுதார்). நான் சென்று பார்த்த போது என் மகனுக்கு உயிர் இருந்தது. 15 நிமிடங்களில் எனது மகனின் உயிர் பிரிந்துவிட்டது. எனது மகன் மற்றும் ஸ்ரிதர் மஞ்சக்குப்பத்தில் உட்கார்ந்து கொண்டுயிருந்தாகவும் பக்கத்தில் நவீன், அருண், நந்தகுமார் மற்றும் நண்பர்கள் உட்கார்ந்து கொண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜியை என் மகன்அரவிந்த் வருமாறு கூப்பிட்டதாகவும் அதற்கு எதிரி பாலாஜி அரவிந்தை அசிங்கமாக பேசி நான் வெளி ஊர் சென்றுவிட்டால் நீ தான் ரவுடியா என்று கேட்டு சரமாரியாக அங்கேயே வெட்டியதாக கேள்விபட்டேன். இந்த விவரத்தை சம்பவ இடத்தில் இருந்த என் கடையில் வேலை செய்த நவீன் கூறினார். எனது மகனின் பிரேதத்தை முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். நான் மேற்சொன்ன சம்பவம் பற்றிய விவரம் தெரிந்து கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் எதிரிக்கு எதிராக புகார்

கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் அதசாஆ 1 ஆகும்**. போலிசார் என்னை இது குறித்து விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

எனக்கு 11 மணியளவில் சம்பவம் நடந்ததாக தெரியவந்ததை புகாரில் சொல்லியுள்ளேன். சாட்சி தாமாக 11.30 மணிக்கு தகவல் வந்ததாக கூறினார். சிவசக்தி நகரில் சம்பவம் நடந்ததாக புகாரில் சொல்லியுள்ளேன். நான் மருத்துவமணைக்கு சென்ற போது அங்கே கடலூர் புதுநகர் போலிசார் இருந்தார்கள். மருத்துமணையில் என்னை கடலூர் புதுநகர் போலிசார் விசாரித்து அங்கே வாக்குமூலம் வாங்கவில்லை. என்னை பிறகு தான் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். முண்டியம்பாக்கம் மருத்துவமணையில் இருந்து பிரேதத்தை என்னிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக என்னை போலிசார் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். போலிசார் அதற்கு பின்னிட்டும் அதற்கு முன்பாகவும் என்னை விசாரிக்கவில்லை. நான் விவரங்கள் சொல்ல எனது மருமகன் வெற்றிவேல் அதசாஆ 1 புகாரை எழுதினார். நான் முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை தான் புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் எனக்கு புகாரில் உள்ள விவரங்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**

Defence

Court

| | |
|---|---|
| Name | ஸ்ரீதர் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் சேட்டு நகரில் வசிக்கிறேன். நான் மெக்கானிக் வேலை செய்கிறேன். இறந்துபோன அரவிந்த் என்கிற சாமிநாதனை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் பாலாஜி. கடந்த 25.01.2025 அன்று இரவு 11 மணிக்கு மஞ்சக்குப்பம் பரமசிவம் நகரில் சின்னசாமி என்பவருக்கு சொந்தமான காலி மனையில் நானும் இறந்த அரவிந்தும் அமர்ந்து மது அருந்திகொண்டு இருந்தோம். பக்கத்தில் 20 அடி துாரத்தில் எங்கள் நகரை சேர்ந்த உதயகுமார், ஜீவன்குமார், நந்தகுமார் ஆகியோர் உட்கார்ந்து பேசிகொண்டு இருந்தார்கள். அதற்கும் பக்கத்தில் இன்னும் 4 நபர்கள் மது அருந்திகொண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜி தனியாக அமர்ந்து மது அருந்திகொண்டு இருந்தார். பாலாஜியை அரவிந்த இங்க வாடா என்று கூப்பிட்டார். அதற்கு பாலாஜி நீ என்னடா பெரிய ஆளா நீ கூப்பிட்டால் வரனுமா தேவிடியா பையா என்று கூறி பக்கத்தில் வந்து பின் பக்கம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அரவிந்தை இடது பக்க கன்னத்தில் வெட்டினார். பாலாஜி வெட்டும் போது கையில் இருந்து கத்தி கீழே விழுந்துவிட்டது அதை அரவிந்த் கையில் எடுத்து வீசினார். அப்போது பாலாஜிக்கு பின் பக்கத்திலும் மற்றும் கால் முட்டியிலும் அதனால் காயம் ஏற்பட்டது. கத்தி அரவிந்த் கையில் இருந்து கீழே விழுந்துவிட்டது. அந்த கத்தியை பாலாஜி எடுத்து அரவிந்தை இடது பக்க தலையிலும் முகம் மற்றும் உடம்பிலும் கன்னா பின்னா என வெட்டினான். அவ்வாறு வெட்டும் போது சாவுடா சாவுடா என்று சொல்லிகொண்டே வெட்டினான். நாங்கள் அருகே சென்ற போது எங்களையும் வெட்டிவிடுவதாக மிரட்டினான். நாங்கள் பயத்தில் பின்னால் வந்தோம். எதிரி கத்தியை காண்பித்து கொண்டே தான் வந்திருந்த Scooty யில் சென்றுவிட்டார். நீதிமன்றத்தில் உள்ள கத்தி தான் எதிரி பயன்படுத்தியதாகும். **அது சான்று பொருள் 1 ஆகும்.** உதயாவும், நந்தகுமாரும் காயம் பட்ட அரவிந்தை Scooty அமரச் செய்து

கடலூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் அவர்களுக்கு பின்னாடியே வண்டியில் மருத்துவமனைக்கு சென்றோம். நவீன்பிரசாத் அரவிந்தின் தாயாருக்கு போன் மூலமாக நடந்த விவரத்தை கூறினார். 11 .30 மணிக்கு மருத்துமனை சென்றோம் 12மணிக்குள் அரவிந்த் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.2**
Defence
Court

| | |
|---|---|
| Name | ஸ்ரீதர் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இரவு 10.30 மணிக்கு நாங்கள் மது அருந்துவதறக்காக சம்பவம் இடம் சென்றோம். எனது இருசக்கர வாகனத்தில் சென்றோம். நானும் அரவிந்தும் வந்தோம். நாங்கள் வருவதற்கு முன்பாகவே எதிரி பாலாஜி தனியாகவும் தாமஸ், நவீன், அருண் ஆகியோர் தனியாகவும் இருந்தார்கள். ஜீவன்குமார், நந்தகுமார் மற்றும் உதயகுமார் அவர்களும் அங்கே இருந்தார்கள். பரமசிவன் நகர் தெருவிற்கு இடது பக்கமாக நானும் அரவிந்தும் இருந்தோம். பாலாஜி சாலையின் வலது பக்கமாக உட்கார்ந்து இருந்தார். சேட்டு இடத்தில் இருந்து பரமசிவன் நகருக்கு செல்லும் தெருவில் இடது பக்கம் நானும் அரவந்தும். வலது பக்கம் பாலாஜியும் இருந்தான். இருவரும் சாலையின் இருபக்கங்களில் இருந்தோம் என்றால் சரிதான். நவீன், அரி, அருண்குமார், தாமஸ் ஆகியோர் பாலாஜி இருந்த பக்கம் சற்று தொலைவில் உட்கார்ந்து கொண்டு இருந்தார்கள். ஜீவன்குமார், நந்தகுமார், உதயகுமார் ஆகியோர் நாங்கள் இருந்த பக்கத்தில் சற்று தள்ளி உட்கார்ந்து இருந்தார்கள். பாலாஜி அமர்ந்து இருந்த இடத்தில் மதில் சுவர் இருந்தது. நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்திற்கு பாலாஜி இருந்த இடத்திற்கு இடையே 90 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சாட்சி நீதிமன்றத்தில் கையை காட்டி இடத்தை குறிப்பிட்ட தொலைவு சுமார் 100 மீட்டர் இருக்கும். பாலாஜி உட்கார்ந்ததாக சொல்லப்படும் இடம் பள்ளி மைதானம் ஆகும். நாங்கள் உட்கார்ந்திருந்த இடம் தான் சின்னசாமி மனை ஆகும். 11.15 மணிக்கு கடலூர்அரசு மருத்துவமணைக்கு சென்றுவிட்டோம். அங்கே கடலூர் புதுநகர் போலிசார் இருந்தார்கள். அங்கே சம்பவம் குறித்து போலிசார் என்னை கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை கூறினேன். அதன் பிறகு காவல் நிலையத்திற்கு நான் போகவில்லை. மருத்துவமணையில் தான் இருந்தோம். கடலூர் மருத்துவமணையில் இரவு 2 மணி வரை இருந்தோம். அடிப்பட்ட எதிரி பாலாஜியை கடலூர் அரசு மருத்துவமணையில் போலிசார்

சேர்த்தார்களா என எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள். மருத்துவமணையில் நான் இருந்த போது சுமார் இரவு 1.30 மணிக்கு என்னை போலிசார் சம்பவ இடத்திற்கு அழைத்து சென்று அங்கே விசாரித்தார்கள். மருத்துவமணையில் விசாரித்தபோதே வாக்குமூலம் வாங்கிவிட்டார்கள். அப்போது இரவு மணி 12 இருக்கும். போலிசார் விசாரணையில் எதிரி பாலாஜி மதில் சுவர் அருகேயும் நான் சின்னசாமி மனையில் உட்கார்ந்து இருந்த விவரத்தையும் கூறியுள்ளேன். நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்தில் முகமது இப்ராகிம் மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். முகமது இப்ராகிம் மாடி வீட்டில் வெளிச்சம் இருந்தது. அதை தாண்டி தெரு விளக்கிலிருந்து வெளிச்சம் வந்தது. போலிசார் விசாரணையில் தெரு விளக்கில் இருந்து வெளிச்சம் வந்ததாக நான் சொல்லியுள்ளேனா என்றால் தெரு விளக்கு மற்றும் கைபேசி டார்ச்சில் வெளிச்சம் வந்ததாக சொல்லியுள்ளேன். பாலாஜி தான் குடித்த இடத்திற்கு பக்கத்தில் அதாவது பள்ளிக்கு பக்கத்தில் தனது இருசக்கர வாகனத்தை நிருத்தி வைத்திருந்தார். போலிசார் விசாரணையில் எதிரி பாலாஜி கத்தியை தனக்கு பின் பக்கம் மறைத்து வைத்திருந்ததாக நான் சொல்லியுள்ளேன். சாபொ 1 கத்தியை நான் முதல் முறையாக நீதிமன்றத்தில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் இடத்திலும் பார்த்தேன். போலிசார் சாபொ 1 கத்தியை காண்பித்து என்னை விசாரிக்கவில்லை. சாபொ 1 கத்தியை சாதாரனமாக ஒரு நபர் பின் பக்கமாக மறைத்து வைத்திருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. ஒரே பகுதி என்பதாலும் பல நாட்களாக எதிரி ஊரில் இல்லாத காரணத்தினாலும் அரவிந்தன் பாலாஜியை சம்பவ சமயத்தில் கூப்பிட்டார். பாலாஜிக்கு அரவிந்தும் எந்த வித முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். முன்விரோதம் எதுவும் இல்லாத காரணத்தினால் எதிரி அரவிந்தை வெட்டியதாக சொல்வது தவறு என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சம்பவத்தை பார்க்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்தில் இருந்து எதிரி பாலாஜியை அழைத்திருக்க முடியாது என்றாலும் அப்படியே அழைத்து இருந்தாலும் அவருக்கு அது கேட்டு இருக்காது என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் நான் குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இறந்த அரவிந்தனுக்கு எதிரே எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.3**

Defence

Court

| | |
|---|---|
| Name | நவீன்பிரசாத் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

முதல்விசாரணை:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் ஆல்பேட்டையில் வசிக்கிறேன். மஞ்சக்குப்பம் அல்லா கோவில் பக்கத்தில் உள்ள அசா 1 அமுதா பூக்கடையில் பூக்கட்டும் வேலை செய்கிறேன். கடந்த 25.01.2025 அன்று இரவு 11 மணிக்கு மஞ்சக்குப்பத்தில் உள்ள கிரிக்கெட் விளையாடும் மைதானத்தில் (அந்த இடம் ஒரு அண்ணன் பெயர் சாமிகண்ணு அவருக்கு சொந்தமான இடம்) நான் தாமஸ், அரி என்கிற ரவிச்சந்திரன், அருண் ஆகியோர் மது அருந்திகொண்டு இருந்தோம். எங்களுக்கு சிறிது தொலைவு தள்ளி உதயா, ஜீவா, நந்தகுமார் ஆகியோர் உட்கார்ந்து பேசி கெண்டு இருந்தார்கள். அப்போது ஸ்ரீதரும், அரவிந்த் என்கிற சாமிநாதனும் சற்று தள்ளி உட்கார்ந்து மது அருந்துகொண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜி தனியாக உட்கார்ந்து மது அருந்திகொண்டு இருந்தார். அரவிந்த பாலாஜியை இங்கே வாடா என்று கூப்பிட்டார். நான் இந்த இடத்தை விட்டு சென்றாலும் ரவுடி தான்டா என்று கூறினார். (சாட்சி எதிரியை சொல்லும் போது அவர் இருந்த கூண்டு பக்கம் கையை காட்டி காட்டி கூறினார்) அதற்கு எதிரி பாலாஜி தேவிடியா பையா என்று கேட்டு இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. எதிரி பாலாஜி நீ கூப்பிட்டால் வரவேண்டுமா. நீ வேண்டுமென்றால் வா என்று கூறினான். எதிரி பாலாஜி தனது இடுப்பில் ஒழித்து வைத்திருந்த கத்தியை எடுத்து அரவிந்த் கன்னத்தில் வெட்டினான். கத்தி கை தவறி கீழே விழுந்தது. அரவிந்த் அந்த கத்தியை எடுத்து பாலாஜி கிட்ட வாராதமாறி கத்தியை வீசினார். அதில் எதிரி பாலாஜிக்கு கழுத்தில் இரண்டு வெட்டு ஏற்பட்டது. எதிரி பாலாஜிக்கு கால் முட்டியிலும் வெட்டு காயம் ஏற்பட்டது. அரவிந்த் கையில் இருந்த கத்தி தவறி விழுந்ததால் அதை பாலாஜி எடுத்து சாவுடா சாவுடா என்று சொல்லி அரவிந்தின் மண்டை, மூக்கு, காது ஆகிய இடங்களில் சரமாரியாக வெட்டினான். அதனால் அரவிந்த் கீழே விழுந்துவிட்டான். நாங்கள் எல்லோரும் தடுக்க போனபோது கிட்ட வந்தால் உங்களையும் வெட்டிவிடுவேன்

என்று பாலாஜி மிரட்டிக்கொண்டே Scooty 8852 பதிவெண் எடுத்து கொண்டு தப்பி சென்றுவிட்டான். உதயாவும், நந்தகுமாரும் அரவிந்தை Scootyயில் கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். கத்தியை காண்பித்து எங்களை மிரட்டியவாறே கத்தியை எடுத்துக்கொண்டு எதிரி பாலாஜி சென்றுவிட்டார். நான் அசா 1 அமுதாவிற்கு போன் மூலாமாக நடந்த விவரத்தை கூறினேன். அசா 1 அமுதா கடலூர் அரசு மருத்துவமனைக்கு வந்துவிட்டார். நாங்களும் மருத்துமனைக்கு வந்துவிட்டோம். காண்பிக்கப்பட்ட புகைப்படத்தில் உள்ள PY 01 VA 8852 என்ற Scooty தான் எதிரி அன்று பயன்படுத்தியதாகதவும் **அந்த இருசக்கர வாகனம் சான்று பொருள் 2 ஆகும்**. கடலூர் அரசு மருத்துமனையில் சேர்த்த 15 நிமிடத்தில் அரவிந்த் இறந்து விட்டார். அசா 1 அமுதா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.3**

Defence

Court

| | |
|---|---|
| Name | நவீன்பிரசாத் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

அஜர் எதிரி எனக்கு அண்ணன் போல் பழக்கம் ஆகும். இரவு 10 மணியளவில் சம்பவ இடத்திற்கு நான் சென்றேன். நான் தாமஸ், அருண், அரி என்கின்ற ரவச்சந்திரன் சென்றோம். நாங்கள் சென்ற போது எதிரி அங்கே இல்லை. அதன் பிறகு தான் வந்தார். நாங்கள் சென்ற ஒரு 10 நிமிடத்தில் எதிரி அங்கே வந்தார். அரி என்கிற ரவிச்சந்திரனின் யமகா வண்டியில் வந்தோம். எதிரி எங்கு இருந்து வந்தார் என்று தெரியவில்லை. அவர் இருசக்கர வாகனத்தில் வந்தார். போலிசார் என்னை கடலூர் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது இரவு 12 மணிக்கு மேலே இருக்கும். அதன் பிறகு நான் தங்கியுள்ள பகுதிக்கு வந்து என்னை விசாரித்தார்கள். சாமிகண்ணுக்கு சொந்தமான மனையில் தான் எதிரி உட்கார்ந்து இருந்தார். எதிரி அவரது வாகனத்தை அவர் உட்கார்ந்த இடத்தின் அருகிலையே நிறுத்திவைத்திருந்தார். சாமிகண்ணுக்கு சொந்தமான மனையில் தான் வாகனத்தை நிறுத்தி வைத்திருந்தாரா என்றால் ஆமாம். நாங்கள் உட்கார்ந்த இடத்திலிருந்து ஸ்ரீதரும் இறந்த அரவிந்தும் சுமார் 100 மீட்டர் தொலைவில் உட்கார்ந்து இருந்தார்களா என்றால் சரிதான். ஸ்ரீதரும் அரவிந்தும் உட்கார்ந்த இடத்திற்கு எதிர் திசையில் எதிரி உட்கார்ந்து இருந்தார். அது 100 மீட்டருக்கும் மேலே இருக்குமா என்றால் எனக்கு மீட்டர் தொலைவு சரியாக தெரியாது ( சாட்சியிடம் ஸ்ரீதர் மற்றும் அரவிந்த், எதிரி பாலாஜி மற்றும் சாட்சி அமர்ந்து இருந்த இடத்தை வெள்ளை தாளில் குறிப்பிட்டு காண்பிக்க சொன்ன போது 3 தரப்பினரும் முக்கோன வடிவில் ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் சாலையின் மறுபக்கத்திலும் சாட்சி மற்றும் எதிரி பாலாஜி சாலையின் ஒரு பக்கத்திலும் அமர்ந்து இருந்ததாக காண்பித்தார்) சாலையின் மறுபக்கத்தில் தான் ஸ்ரீதர் மற்றும் இறந்த அரவிந்த் அமர்ந்து இருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் அந்த விவரம் கேட்காததால் நான்

சொல்லவில்லை. பாலாஜி கத்தியால் அரவிந்தை வெட்டிய பிறகு என் அருகே வந்த போது கத்தியை பார்த்தேன். போலிசார் விசாரணையில் எதிரி பாலாஜி கத்தியை இடுப்பில் வைத்திருந்ததாக நான் சொன்னேனா என்று ஞாபகம் இல்லை. சாபொ 1 கத்தியை எதிரி தனது இடுப்பு பகுதியில் வைத்திருக்க முடியாது என்றால் சரியல்ல. நாங்களும், எதிரி பாலாஜி அமர்ந்து இருந்த இடத்தில் வெளிச்சம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. அங்கே தெரு விளக்கு இருந்தது. ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்து இருந்த இடத்தில் வெளிச்சம் இல்லை என்றால் அவர்கள் கைப்பேசியில் இருந்த டார்ச்சை ஆன் செய்து வைத்திருந்தார்கள். அரவிந்த் மற்றும் ஸ்ரீதர் அமர்ந்து இருந்த இடத்தில் ஒரு முஸ்லிம் நபர் வீடு உள்ளது என்றால் பல முஸ்லிம் நபர்களின் வீடுகள் உள்ளது. நான் மற்றும் பாலாஜி அமர்ந்து இருந்த பக்கம் பல முஸ்லிம் நபர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரி பாலாஜிக்கும் அரவிந்துக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கும் அரவிந்துக்கும் எந்த முன்விரோதமும் இல்லாத காரணத்தினால் எதிரி அரவிந்தை கொலை செய்திருக்க முடியாது என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. ஸ்ரீதர் மற்றும் அரவிந்தன் உட்கார்ந்து இருந்த இடத்தில் இருந்து எதிரியை அழைத்து இருக்க முடியாது என்றாலும் அழைத்திருந்தாலும் எதிரிக்கு கேட்டு இருக்காது என்றாலும் சரியல்ல. இறந்த அரவிந்தன் நான் குடியிருக்கும் பகுதியை சேர்ந்தவர் என்றால் சரிதான். எனவே எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியே இல்லை என்றாலும் சாபொ 1 கத்தியை நான் சம்பவத்தில் பார்த்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஜீவன்குமார், நந்தகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோர் அரவிந்தன் மற்றும் ஸ்ரீதர் அமர்ந்து இருந்த இடத்தில் இருந்து சற்று தள்ளி உட்கார்ந்து இருந்தார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் நான்

குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.7**

Defence

Court

| | |
|---|---|
| Name | ஜீவன்குமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் பெண்ணையார் ரோட்டில் வசிக்கிறேன். நான் பெயின்டர் வேலை செய்கிறேன். இறந்த அரவிந்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 25.01.2025 இரவு 11 மணிக்கு நானும் எனது அண்ணன் உதயகுமார், நந்தகுமார் பரமசிவன் நகர் சின்னசாமி காலி மனையில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தோம். அரவிந்த் மற்றும் ஸ்ரீதர் டார்ச் வெளிச்சத்தில் உட்கார்ந்து குடித்துக்கொண்டு இருந்தார்கள். அங்கே தெரு விளக்கு வெளிச்சமும் இருந்தது. அதே காலி மனையில் சாலைக்கு பக்கத்தில் அரி என்கிற ரவிச்சந்திரன், அருண்குமார், நவீன்பிரசாத், தாமஸ் ஆகியோர் உட்கார்ந்து குடித்து கொண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜி சாலையின் மற்ற பக்கத்தில் இருட்டில் உட்கார்ந்து குடித்துக்கொண்டு இருந்தார். அரவிந்த் பாலாஜியை இங்கே வாடா என்று கூப்பிட்டார். அதற்கு நான் ஏன் வரவேண்டும் என பாலாஜி கேட்டு நீ என்ன பெரிய ஆளா நான் வரமாட்டேன் என்று கூறினார். ஏன்டா தேவிடியா பையா கூப்பிடுற என்று மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து அரவிந்தின் இடது பக்க கன்னத்தில் வெட்டினார். உடனே கத்தி கீழே விழுந்துவிட்டது. அந்த கத்தியை அரவிந்த் எடுத்து விட்டான். பாலாஜி அந்த கத்தியை பிடுங்க போனான். தற்காப்புக்கு அரவிந்தன் பாலாஜி கழுத்தில் வெட்டினான். அரவிந்த் கத்தியை வீச பாலாஜி குனிந்து கத்தியை பிடுங்க போன போது பாலாஜியின் கழுத்தில் வெட்டுப்பட்டது. பாலாஜியின் தாடையிலும், இடது கால் முட்டி மற்றும் இடது கால் மணிகட்டில் (Ankle) வெட்டுக்காயம் ஏற்பட்டது. அரவிந்த் கையில் இருந்து கத்தி கீழே விழுந்தது பாலாஜி அதை எடுத்துக்கொண்டான். பாலாஜி அரவிந்தின் இடது கன்னம், நடு மண்டை, இடது பக்க மண்டை, காது, மூக்கு, வாய், உள்ளங்கை ஆகியவற்றில் சராமரியாக சாவுடா சாவுடா என்று கூறி வெட்டினான். அய்யோ அய்யோ என்று கத்திக்கொண்டு பாலாஜியை நாங்கள் பிடிக்க போனோம். கத்தியை ஓங்கி பாலாஜி உங்களுக்கும் இதே கதி

தான் என்று மிரட்டினான். நாங்கள் பயந்து பின்னால் போக எதிரி 8852 என்கின்ற Scooty யில் சென்றுவிட்டான். உதயாவும், நந்தகுமாரும் அரவிந்தை கடலூர் அரசு மருத்துவமணைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றார்கள். நாங்களும் அவர்களுக்கு பின்னால் அரசு மருத்துமணைக்கு சென்றோம். நவீன்பிரசாத் அரவிந்தின் அம்மாவுக்கு போன் மூலமாக நடந்த விவரத்தை கூறினான். மருத்துவமணைக்கு சென்றவுடன் அரவிந்த் இறந்துவிட்டார். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.7**

Defence

Court

| | |
|---|---|
| Name | ஜீவன்குமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

என் பெயரில் பல குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். இரவு 12.15 மணிக்கு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கே கடலூர் புதுநகர் போலிசார் இருந்தார்கள். அப்போது என்னிடம் போலிசார் வாக்குமூலம் வாங்கவில்லை. 27.01.2025 அன்று எனது வீட்டிலும் மற்றும் சம்பவம் நடந்த இடத்திலும் போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் உட்கார்ந்த இடத்தில் இருந்து ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் 15 அடி தொலைவில் உட்கார்ந்து இருந்தார்கள். போலிசார் விசாரணையில் எதிரி பாலாஜி சாலையின் மற்ற பக்கத்தில் இருட்டில் உட்கார்ந்து குடித்து கொண்டு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நாங்கள் ஒரு பக்கத்திலும் எதிரி மறு பக்கத்திலும் உட்கார்ந்து இருந்ததாக சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திற்கு இரவு 10-10.15 மணிக்கு சென்றேன். நான் சென்ற சமயத்தில் அசா 2 முதல் அசா 6 வரை அங்கே இருந்தார்கள். சாலையின் இரண்டு பக்கங்களிலும் முஸ்லிம் நபர்களின் வீடு உள்ளது என்றால் சரிதான். நாங்கள் உட்கார்ந்து இருந்து இடத்தில் செல்போன் வெளிச்சம் இருந்தது. எதிரி பாலாஜிக்கும் இறந்த அரவிந்துக்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எனது அம்மாவை வெட்டியது சம்மந்தமாக எதிரி பாலாஜியை அவரது பிறந்த நாள் அன்று நாங்கள் தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் விசாரணையில் அரவிந்த் தற்காப்பிற்கு எதிரி பாலாஜியை கழுத்தில் வெட்டியதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் நான் குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம்

அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**

Defence

Court

| | |
|---|---|
| Name | நந்தகுமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் பெண்ணையார் ரோட்டில் வசிக்கிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். இறந்து போன அரவிந்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 25.01.2025ம் தேதி இரவு 11 மணிக்கு பரமசிவன் நகர் சின்னசாமி மனையில் எப்போதும் போல் நான் நந்தகுமார், உதயகுமார், ஜீவா ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தோம். சற்று தள்ளி அரவிந்தும் ஸ்ரீதரும் உட்கார்ந்து மது அருந்திகொண்டு இருந்தார்கள். பக்கத்தில் நவீன்பிரசாத், அரிகரன், தாமஸ் மற்றும் அருண் ஆகியோர் உட்கார்ந்து அவர்களும் மது அருந்திக்கொண்டு இருந்தார்கள். அதை தாண்டி எதிரி பாலாஜி தனியாக உட்கார்ந்து மது அருந்திகொண்டு இருந்தார். அரவிந்த் பாலாஜியை இங்கே வாடா என்று கூப்பிட்டார். அதற்கு எதிரி பாலாஜி நீ என்னடா என்னை கூப்பிடுவது நான் ஊரை விட்டு பாண்டிச்சேரி போய்விட்டால் என்ன நான் தான் இங்கே ஆளு என்று தேவிடியா பையா என்று கூறிக்கொண்டே கையில் மறைவாக வைத்திருந்த கத்தியை எடுத்து அரவிந்தின் இடது பக்க கன்னத்தில் வெட்டினார். அந்த கத்தி கீழே விழவே அதை அரவிந்த் எடுத்து வீசினார். வீசும்போது பாலாஜிக்கு கழுத்திலும் கால் முட்டியிலும் காயம் ஏற்பட்டது. அந்த கத்தி கீழே விழ பாலாஜி எடுத்துக்கொண்டு அரவிந்தின் மண்டையிலும், காதிலும், முகத்திலும், கையிலும் (கட்டை விரல்) வெட்டிவிட்டு ஓட நாங்கள் விரட்டிய போது கத்தியை காண்பித்து எங்களை மிரட்டி நீங்களும் வந்தால் இப்படி தான் வெட்டுவேன் என்று சொல்லி மிரட்டிவிட்டு Scooty யில் சென்றுவிட்டார். அந்த வண்டி பாண்டிச்சேரி வாகனம் ஆகும். அதன் பதிவெண் 8852 ஆகும். நானும் உதயகுமாரும் இருசக்கர வாகனத்தில் அரவிந்தை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனையில் சேர்த்தோம் சிறிது நேரத்தில் அரவிந்தின் உயிர் போய்விட்டதாக

தெரியபடுத்தினார்கள். அரவிந்தின் தாயார் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.6**
Defence
Court

| | |
|---|---|
| Name | நந்தகுமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

நானும் உதயகுமாரும் அரவிந்தை கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது அங்கே போலிசார் இருந்தார்கள். அவர்கள் கடலூர் புதுநகர் போலிசாரா என்று எனக்கு தெரியாது. நாங்கள் மருத்துமனை வந்த பிறகு கடலூர் புதுநகர்போலிசா எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. மருத்துமனையில் அன்று இரவே கடலூர் புதுநகர் போலிசார் என்னை விசாரித்து வாக்கமூலம் வாங்கிகொண்டார்கள். ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் நாங்கள் செல்லும் போதே அங்கு இருந்தார்கள். தாமஸ், நவீன், அருண் மற்றும் அரிகரன் ஆகியோர் அங்கே நாங்கள் செல்லும் போதே இருந்தார்கள். எதிரி பாலாஜியும் நாங்கள் செல்லும் போதே அங்கு இருந்தார். நாங்கள் இரவு 10 மணிக்கு உட்கார்ந்து பேசலாம் சம்பவயிடம் சென்றோம். நான் உட்கார்ந்து இருந்த இடத்திற்கும் ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்து இருந்த இடத்திற்கும் இடையே சுமார் 20 அடிக்கு மேலே தூரம் இருக்கும். செம்மண் ரோடுக்கு ஒரு பக்கத்தில் உதயா, ஜீவா, நான் உட்கார்ந்து இருந்தோம், மறுபக்கத்தில் நவீன், தாமஸ், அரிகரன் மற்றும் அருண் உட்கார்ந்து இருந்தார்கள். (சாட்சி இதை தாமாக கூறினார்) எதிரி பாலாஜி நவீன் உட்கார்ந்து இருந்த பக்கத்தில் சற்று தள்ளி உட்கார்ந்து இருந்தார். ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் நாங்கள் உட்கார்ந்து இருந்த பக்கத்தில் சற்று தள்ளி உட்கார்ந்து இருந்தார்கள். போலிசார் விசாரணையிலும் இதை தான் கூறினேன் என்றால் சரிதான். ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்து இருந்த இடத்தில் அவர்களது செல்போன் டார்ச் வெளிச்சம் இருந்தது. எதிரி பாலாஜி உட்கார்ந்து இருந்த பக்கத்தில் மின்கம்ப வெளிச்சம் இருந்தது. போலிசார் விசாரணையில் இதை தான் சொன்னேன். நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்திலிருந்து சற்று தள்ளி முஸ்லிம் நபர்களின் வீடுகள் இருந்தது. (சாட்சி தாமாக தாங்கள் உட்கார்ந்து இருந்த பகுதியில் முஸ்லிம் நபர்களின் வீடு இல்லை என்றும் எதிரி பாலாஜி உட்கார்ந்து இருந்த பக்கம் தான் முஸ்லிம் நபர்களின்

வீடுகள் இருந்ததாகவும் கூறினார்) எதிரி பாலாஜி கையில் கத்தியை மறைவாக வைத்திருந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அரவிந்தை நாங்கள் அழைத்து சென்றதாக சொல்லும் வாகனத்தை குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் நான் குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இறந்த அரவிந்தனுக்கு எதிரே எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.5**

Defence

Court

| | |
|---|---|
| Name | உதயகுமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் ஆல்பேட்டையில் வசிக்கிறேன். நான் மெக்கானிக் வேலை செய்கிறேன். இறந்த அரவிந்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 25.01.2025 அன்று இரவு 11 மணிக்கு மஞ்சக்குப்பம் பெண்ணையார் ரோடு சின்னப்பன் மனையில் நான் ஜீவன்குமார், நந்தகுமார் உட்கார்ந்து பேசி கொண்டு இருந்தோம். பக்கத்தில் ஸ்ரீதரும், அரவிந்தும் மது குடித்து கொண்டு இருந்தார்கள். அதற்கு பக்கத்தில் நவீன், தாமஸ், அருண்குமார் மற்றும் இன்னொருத்தர் பெயர் ஞாபகம் வரவில்லை அவர்களும் மது அருந்திகெண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜி தனியாக உட்கார்ந்து மது அருந்திகொண்டு இருந்தார். அரவிந்த் எதிரி பாலாஜியை இங்கே வாடா என்று அழைத்தார். அப்போது பாலாஜி நீயெல்லாம் ஒரு ஆளா நான் இந்த ஊரை விட்டு போனாலும் நான் பெரிய ஆள் என்று கூறினார். தேவிடியா பையா என்று கூறி பாலாஜி தனது இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து அரவிந்தின் இடது கன்னத்தில் வெட்டினார். கத்தி கை தவறி கீழே விழுந்துவிட்டது. அப்போது அரவிந் அந்த கத்தியை எடுத்து வீசினார். வீசியதில் பாலாஜியின் பின் கழுத்து மற்றும் இடது காலில் காயம் ஏற்பட்டது. கைத்தவறி கத்தி கீழே விழுந்துவிட்டது. அதை பாலாஜி எடுத்து சரமாரியாக அரவிந்தை பின் நடு மண்டை, முகம், கை, ஆகியவற்றில் வெட்டினார். அரவிந்த் சரிந்து கீழே விழுந்துவிட்டார். எதிரி பாலாஜி அரவிந்தை வெட்டும் போது சாவுடா சாவுடா என்று கூறிக்கொண்டே வெட்டினார். நாங்கள் பாலாஜியை பிடிக்க போனோம். உங்களுக்கும் இதே நிலைமை தான் நான் உங்களையும் வெட்டுவேன் என பாலாஜி மிரட்டினான். எதிரி Scooty எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். அதோடு நானும் நந்தகுமாரும் அரவிந்தை உட்கார வைத்துக்கொண்டு கடலூர் அரசு மருத்துமணைக்கு வந்துவிட்டோம். சிகிச்சை கொடுத்தார்கள் ஆனால் அரவிந்த் உடனே

இறந்துவிட்டார். இது குறித்து என்னை மருத்துவமனையில் போலிசார் விசாரித்தார்கள்.

லேப்டாப்பில் நான் சொன்னதை டைப் செய்து கொண்டார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.5**
Defence
Court

| | |
|---|---|
| Name | உதயகுமார் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

போலிசார் விசாரித்தபோது பெண்ணையார் ரோடு சின்னப்பன் மனையில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் மற்றும் ஜீவன்குமார் சகோதரர்கள் என்றால் சரிதான். ஜீவன்குமார் பெயரில் பல குற்ற வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். எதிரியின் அக்கா வீடு கம்மியம்பேட்டையில் உள்ளது என்றால் தெரியாது. கம்மியம்பேட்டையில் உள்ள நபர்கள் எனது அம்மா காமாட்சியை வெட்டியதாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் கம்மியம்பேட்டையில் இருந்து தள்ளியுள்ள சூரப்பன் நாயக்கன் சாவடியை சேர்ந்தவர்கள் தான் வெட்டியதாக தான் வழக்கு கொடுத்துள்ளோம். நாங்கள் யார் மீது புகார் கொடுத்தோமோ அவர்கள் எதிரி பாலாஜியின் நண்பர்கள் என்றால் அது பற்றி தெரியாது. எனது அம்மாவை தாக்கியது சம்மந்தமாக எதிரி பாலாஜியை நாங்கள் தாக்கினோம் என்றால் சரியல்ல. ஸ்ரீதர் மற்றும் அரவிந்தன் உட்கார்ந்து இருந்த இடத்திலிருந்து சுமார் 20 அடி தொலைவில் நான் நந்தகுமார் மற்றும் ஜீவன்குமார் உட்கார்ந்து இருந்தோம். நாங்கள் உட்கார்ந்து இருந்த இடத்திலிருந்து தாமஸ், நவீன், மற்றும் அருண் சுமார் 30 அடி தொலைவில் உட்கார்ந்து இருந்தார்கள். ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்து இருந்த இடத்திலிருந்து சுமார் 25 அடி தொலைவில் எதிரி பாலாஜி உட்கார்ந்து இருந்தார். நாங்கள் வருவதற்கு முன்பாகவே ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் சம்பவ இடத்தில் இருந்தார்கள். தாமஸ், நவீன் மற்றும் அருண் ஆகியோர் நாங்கள் வருவதற்கு முன்பாகவே சம்பவ இடத்தில் இருந்தார்கள். எதிரி பாலாஜி நாங்கள் வருவதற்கு முன்பாகவே அங்கே இருந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அருகே பல முஸ்லிம் நபர்கள் வீடு உள்ளது என்றால் சரிதான். அரவிந்த் மற்றும் ஸ்ரீதர் அமர்ந்து இருந்த இடத்தில் செல்போன் டார்ச் வெளிச்சம் இருந்தது. அரவிந்த் மற்றும் ஸ்ரீதர் அமர்ந்து இருந்த இடத்திற்கும் எதிரி பாலாஜி அமர்ந்து இருந்த இடத்திற்கு இடையே மின்கம்ப வெளிச்சம்

இருந்தது. போலிசார் விசாரணையில் இந்த விவரத்தை பதட்டத்தில் நான் சொல்லவில்லை. இறந்த அரவிந்தை நானும் நந்தகுமாரும் ஸ்ரீதருக்கு சொந்தமான Scooty யில் மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். போலிசார் மேற்சொன்ன Scooty காண்பித்து என்னை விசாரிக்கவில்லை. இரவு 12 மணியளவில் போலிசார் என்னை மருத்துவமணையில் விசாரித்தார்கள். நான் மருத்துவமணைக்கு சென்ற சமயத்தில் போலிசார் அங்கே இல்லை. நான் சென்ற 15 நிமிடத்தில் போலிசார் மருத்துவமணைக்கு வந்துவிட்டார்கள். அப்பேதே போலிசான் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் விசாரணையில் எதிரி இடுப்பில் கத்தி வைத்திருந்த விவரத்தை நான் சொன்னேன். சாபொ 1 கத்தியை நான் சொல்வது போல் இடுப்பு பகுதியில் வைத்துகொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த நபர் நான் குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இறந்த அரவிந்தனுக்கு எதிரே எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**

Defence

Court

| | |
|---|---|
| Name | தாமஸ் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | கிறிஸ்டின் |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**முதல்விசாரணை**:

நான் கடலூர் மஞ்சக்குப்பம் ஆல்பேட்டையில் வசிக்கிறேன். நான் பிளம்பர் வேலை செய்கிறேன். இறந்து போன அரவிந்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 25.01.2025 தேதி இரவு 11 மணிக்கு பரமசிவன் நகர் சின்னசாமி மனையில் நான் அரி, நவீன்பிரசாந்த், அருண் ஆகியோர் உட்கார்ந்து மது அருந்திகொண்டு இருந்தோம். நாங்கள் வருவதற்க முன்பாகவே அரவிந்தும் ஸ்ரீதரும் அங்கே உட்கார்ந்து குடித்து கொண்டு இருந்தார்கள். சற்று தள்ளி உதயகுமார், நந்தகுமார் மற்றும் ஜீவன்குமார் உட்கார்ந்து பேசி கொண்டு இருந்தார்கள். எதிரி பாலாஜி தனியாக உட்கார்ந்து குடித்து கொண்டு இருந்தார். அரவிந்த் எதிரி பாலாஜியை இங்கே வாடா என்று கூப்பிட்டார். எதிரி பாலாஜி நீ என்ன பெரிய ஆளா என்றும் நீ இங்கே வாடா என்றும் சொல்லி அசிங்கமா தேவிடியா பையா என்று திட்டி இடது பக்க கழுத்தில் அரவிந்தை தான் மறைத்து வைத்திருந்த கறி வெட்டும் கத்தியால் எதிரி பாலாஜி வெட்டினான். கத்தி தவறி கீழே விழுந்துவிட்டது. அந்த கத்தியை அரவிந்த் எடுத்து வீசினார். வீசும் போது கழுத்து கை ஆகியவற்றில் எதிரி பாலாஜிக்கு காயம் ஏற்பட்டது. அரவிந்த் கையில் இருந்து கத்தி தவறி கீழே விழுந்துவிட்டது. உடனே அந்த கத்தியை பாலாஜி எடுத்து சாவுடா சாவுடா என்று சொல்லி அரவிந்தின் நடு மண்டை, முகம், கழுத்து, ஆகிய பகுதிகளில் வெட்டினார். நாங்கள் அருகே சென்ற போது எங்களையும் கொன்றுவிடுவதாக எதிரி பாலாஜி மிரட்டினார். மிரட்டி விட்டு வண்டியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார். நந்தகுமாரும், உதயகுமாரும் அரவிந்தை இருசக்கர வாகனத்தில் கடலூர் அரசு மருத்துமணைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். நாங்களும் மருத்துமணைக்கு சென்றுவிட்டோம். அரவிந்த் மருத்துமணையில் 12 மணிபோல் இறந்துவிட்டான். போலிசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**:

**குறுக்கு விசாரணை மதிய இடைவேளைக்கு பின் ஒத்திவைக்கப்படுகிறது.**

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 75 of 2025**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**
Defence
Court

| | |
|---|---|
| Name | தாமஸ் |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | கிறிஸ்டின் |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 20th day of November 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on T**hursday the 20th day of November 2025.**

**எதிரி நீதிமன்ற காவலில் இருந்து ஆஜர் செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

நான் சுமார் 10 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்ற சமயத்தில் எதிரி பாலாஜி சம்பவ இடத்தில் இல்லை. (சாட்சி கேள்வி புரியவில்லை என்றும் தான் வந்த சமயத்தில் எதிரி பாலாஜி சம்பவ இடத்தில் இருந்ததாகவும் தாமாக கூறினார்) இரவு 11.30 மணிக்கு கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கே கடலூர் புதுநகர் போலிசார் இருந்தார்கள். மருத்துவமனையில் என்னை போலிசார் விசாரித்து வாக்கமூலம் வாங்கிகொண்டார்கள். என்னை விசாரித்த சமயத்தில் மருத்துவமனையில் அரவிந்தின் தாயார் மற்றும் அசா 2, அசா3 மற்றும் அசா 5 முதல் அசா 7 சாட்சிகள் அங்கே இருந்தார்கள். ஸ்ரீதர் மற்றும் அரவிந்தன் நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே இருந்தார்கள். நான் அரிபிரசாந்த், நவீன், அருண் ஆகியோர் ஒன்றாக சம்பவயிடத்திற்கு சென்றோம். நான் உட்கார்ந்த இடத்தில் இருந்து ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் 30 அடி தொலைவில் உட்கார்ந்து இருந்தார்கள். ஜீவன்குமார், நந்தகுமார் மற்றும் உதயகுமார் 40 அடி தொலைவில் ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்த இடத்திலிருந்து உட்கார்ந்து இருந்தார்கள். எதிரி பாலாஜி, ஸ்ரீதர் மற்றும் அரவிந்த் உட்கார்ந்த இடத்திலிருந்து 40 அடி தொலைவில் உட்கார்ந்து இருந்தார். போலிசார் விசாரணையில் எதிரி உட்பட நாங்கள் அனைவரும் சின்னசாமி மனையில் உட்கார்ந்து இருந்ததாக தான் சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. (தற்போது சாட்சி போலிசார் விசாரணையில் எதிரி உட்பட தாங்கள் அனைவரும் சின்னசாமி இடத்தில் தான் உட்கார்ந்து இருந்ததாக சொல்லியுள்ளதாக கூறினார்) நாங்கள் உட்கார்ந்து இடத்தில் முஸ்லிம் நபர் வீடு இருந்தது என்றால் சரிதான். அரவிந்தன் மற்றும் ஸ்ரீதர் உட்கார்ந்து இருந்த இடத்தில் கைபேசியில் இருந்த டார்ச்லைட் ஆன் செய்து வைத்திருந்தார்கள். போலிசார் விசாரணையில் எதிரி கறி வெட்டும் கத்தியை மறைத்து வைத்திருந்ததாக நான் சொல்லவில்லை. நான் கண்ணுற்ற சாட்சி கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இறந்த

நபர் நான் குடியிருக்கும் பகுதியில் வசித்த காரணத்தினால் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.  எதிரிக்கும் இறந்த அரவிந்தனுக்கு எதிரே எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான்.  முன் விரோதம் இல்லாத காரணத்தினால் பாலாஜி அரவிந்தனை வெட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.  பாலாஜியை நாங்கள் தடுக்க போனதாகவும் அப்போது அவர் எங்களை மிரட்டியதாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*